பக்கங்கள் 23

# காலை முரசு

முழக்கம்: 02 வள்ளுவ ஆண்டு 2057 வைகாசி 25 ஞாயிற்றுக்கிழமை 08.06.2025 அதிர்வு 308

## சமல் ராஜபக்ஷ விரைவில் கைது?



முன்னாள் ஜனாதிபதிகளான மஹிந்த ராஜபக்ஷ மற்றும் கோட்டாபய ராஜபக்ஷ 02



# இந்தியாவுடன் அநுர அரசு செய்த இரகசிய ஒப்பந்தங்கள் என்ன?

## சஜித் அணி பகிரங்கக் கேள்வி

"இந்தியாவுடன் செய்துகொள்ளப்பட்டுள்ள ஒப்பந்தங்கள் தொடர்பில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான அரசு இன்னும் நாடாளுமன்றத் துக்கோ, நாட்டுக்கோ தெரியப்படுத்தவில்லை. அவ்வாறெனில் அரசு செய்யக் கூடாத ஒன்றைச் செய்துள்ளதா? தெரிந்தோ தெரியாமலோ எமது தாய் நாடு காட்டிக் கொடுக்கப்பட்டுள்ளதா?"

- இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பி பெரேரா கேள்வி எழுப்பினார். 02



# செம்மணி மனிதப் புதைகுழியில் இருந்து 19 எலும்புக்கூடுகள் முழுமையாக மீட்பு!

## மூன்றாம் கட்ட அகழ்வுப் பணி ஜூன் 26 ஆரம்பம்



(எஸ்.நிதர்ஷன்)

யாழ். செம்மணி – சிந்துப்பாத்தி இந்து மயானத்தில் காணப்பட்ட மனிதப் புதைகுழி அகழ்வின்போது நேற்றுடன் 19 மனித எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அடையாளம் காணப்பட்ட 19 எலும்புக்கூடுகளும் புதைகுழியில இருந்து வெளியே மீட்கப்பட்டுள்ளன.

இந்த 19 எலும்புக்கூடுகளும் சட்ட வைத்திய அதிகாரி செல்லையா பிரணவனிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன எனவும், சட்ட வைத்திய அதிகாரி குறித்த எலும்புக்கூடுகளை நீதி 03




நாட்டின் பொருளாதாரம் மிக மோசமான கட்டத்தை அடைந்தமைக்கு அரசியல்வாதிகளின் பொறுப்பற்ற செயற்பாடுகள்தான் காரணம் என்று விமர்சித்து வந்த தேசிய மக்கள் சக்தி, தாங்கள் ஆட்சிக்கு வந்தால் ஊழல், முறைகேடுகள், மோசடிகள், அரச சொத்துக்களை சூறையாடுதல், முறையற்ற விதத்தில் சொத்துச் சேர்த்தல் போன்ற குற்றங்களில் ஈடுபட்ட அரசியல்வாதிகளை சட்டத்தின் முன் நிறுத்துவோம் என்று சூளுரைத்திருந்தனர்.

ஆயினும் ஆட்சியைக் கைப்பற்றி ஆறு மாதங்கள் கடந்த பின்னும் இது விடயத்தில் குறிப்பிடத்தக்க முன் நகர்வு எதையும் ஆளும் தரப்புக் காட்டவில்லை.

ஆயினும், இப்போது 02

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த விடயத்தில் ஆளுந்தரப்பின் வழிகாட்டலில் அதிகாரிகள் சுறுசுறுப்பாக இயங்கத் தொடங்கி இருக்கின்றனர் என்று கூறப்படுகின்றது.

அதனால் முறையற்ற விதத்தில் சொத்து சேர்த்த பலரும் இப்போது கம்பி எண்ணத் தயாராகிறார்கள் எனத் தெரிகின்றது.

முறையற்ற விதத்தில் அரச காணி ஒன்றை மோசடியாக விற்றுப் பணம் சுருட்டினார்கள் என்று கூறப்படும் முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா உட்பட குழுவுக்கு எதிரான வழக்கு இப்போது புதிய திசைக்கு திரும்பி இருக்கின்றது. காணி விற்பனை மோசடிக்காகவே மேர்வின் சில்வா கைது செய்யப்பட்டார். ஆனால் இப்போது முறையற்ற விதத்தில் பெருமளவு சொத்துக்களைச் சேர்த்த விவகாரம் தொடர்பான விசாரணைக்குள் அவர் மாட்டிக் கொண்டிருக்கிறார்.

இப்போதைய விசாரணை விடயத்தில் முக்கியமான ஓர் அம்சம் உள்ளது. கடந்த அரசாங்கத்தினால் கொண்டு வரப்பட்ட லஞ்சச் சட்டம் மற்றும் நாணய சலவைச் சட்டம் ஆகியன இவ்வாறு முறையற்ற விதத்தில் சொத்துச் சேர்த்த பலரையும் இலகுவில் சிக்க வைத்து, பெரும் தண்டனைக்கு உள்ளாக்க வழி செய்திருப்பதாக சட்டத்தரப்பில் கூறப்படுகின்றது.

இதில் வேடிக்கை என்னவென்றால், முன்னைய அரசில் இருந்த போது இந்த இரண்டு சட்டங்களின் தாற்பரியங்களையும் புரிந்து கொள்ளாமல், அவற்றுக்கு ஆதரவுக் கையை உயர்த்தி, அவை சட்டமாவதற்கு வழி செய்த முன்னைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலரே இப்போது அதே சட்டத்தின் கீழ் கம்பி எண்ணத் தயாராகி வருகின்றனர் என்பதுதான். தாம் விதைத்த வினையிலேயே அவர்கள் சிக்கப் போவது இதில் முக்கியமான விடயம்.

மஹிந்த ராஜபக்ஷவின் மூத்த சகோதரர் சமல் ராஜபக்ஷ உட்பட பலருக்கு எதிராக இந்தச் சட்டம் விரைவில் பாயும் எனத் தெரிகிறது.

2015 தேர்தல் சமயத்தில் விளையாட்டுத்துறை அமைச்சராக அரச நிதியை விளையாடிய மஹிந்தானந்த அளுத்கமகேயும், மற்றும் முன்னாள் அமைச்சர் நளின் பெர்னான்டோவும் முறையே 20 மற்றும் 25 வருடங்கள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

தங்கள் அரசு அதிகாரத்துக்கு வரா விட்டால், இத்தகைய தண்டனை சாத்தியமே இல்லை என்று பொது நிகழ்வு ஒன்று கூறிய தற்போதைய நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார, அதனால் பெரும் நெருக்கடியை எதிர்கொள்ளும் நிலைக்கு வந்திருக்கிறார்.

நீதிமன்றங்கள் அரசின் வழிகாட்டு தலை ஏற்று அல்லது செயற்பாடுகளை கணக்கெடுத்து தண்டனைகளைத் தீவிரமாக்கின்றன என்ற சாரப்பட கருத்துக் கூறுவது நீதிமன்றத்தை அவமதிக்கும் செயலாகும் என சுட்டிக்காட்டப்படுகிறது. நீதி அமைச்சரின் இந்த நடவடிக்கைக்கு எதிராக நீதிமன்றம் செல்வதற்கும், நீதிமன்ற அவமதிப்பு வழக்குத் தொடர்வதற்கும் எதிர்த் தரப்புகள் தயாராகி வருகின்றன எனக் கூறப்படுகின்றது.

முன்னாள் அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்க, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க, பொதுபலசேனாவின் சர்ச்சைக்குரிய கலபொடஅத்த ஞானசார தேரர் போன்றோர் நீதிமன்ற அவமதிப்புக் குற்றச்சாட்டுகளில் குற்றவாளிகளாகக் காணப்பட்டு வருட கணக்காக சிறைத் தண்டனைகளை அனுபவித்தவர்கள்.

அந்த வகையில் இப்போதைய நீதி அமைச்சரும் நெருக்கடியை எதிர்கொள்வாரா என்பதைப் பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

முன்னைய ஆட்சி காலத்தில் கோலோச்சிய பல அரசியல்வாதிகள் இப்போது நிதிக் குற்ற விசாரணை பிரிவினால் அடுத்தடுத்து விசாரணைகளுக்கு அழைக்கப்படுகிறார்கள். இதன் தொடர்ச்சியாக முன்னாள் அரசியல்வாதிகள், அமைச்சர்கள், நிர்வாகத்தில் இருந்தோர் போன்றவர்களுக்கு எதிரான வழக்குகள் இனிமேல் சீரியஸாக முன்நகரும் என்று எதிர்பார்க்கலாம்.

தினசரி முன்னாள் அமைச்சர்கள், முக்கிய தலைவர்கள், நிர்வாகிகள் சிறைக்குச் செல்வது பற்றிய செய்திகளை இனிமேல் தாராளமாக எதிர்பார்க்கலாம்.

## இந்தியாவுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பில் நேற்று சனிக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் இவ்வாறு கேள்வி எழுப்பினார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

"இந்தியாவுடன் எத்தனை புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டுள்ளன? அவற்றின் உள்ளடக்கங்கள் எவ்வாறானவை? அவற்றுக்குச் சட்டமா அதிபரின் அனுமதி கிடைக்கப் பெற்றதா? அல்லது அமைச்சரவை அனுமதி கிடைத்ததா? அவை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டதா என்பது தொடர்பில் நாம் தொடர்ச்சியாகக் கேள்விகளை முன்வைத்தோம்.

கடந்த வாரம் பிரதமரிடம் இது குறித்து கேள்வி எழுப்பினோம். ஆனால், பிரதமருக்குப் பதிலாக சபை முதல்வர் எழுந்து தம்வசம் தகவல்கள் இல்லை என்றும், அதற்குச் சற்று கால அவகாசம் வேண்டும் என்றும் கூறினார்.

நாட்டில் பரவலான பேசுபொருளாக அமைந்த இந்த விவகாரம் தொடர்பில் தம்மிடம் தகவல் இல்லை என சபை முதல்வர் கூறுவது புதுமையாகவுள்ளது.

பிறிதொரு நாட்டுடன் செய்து கொள்ளப்படும் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் தொடர்பில் கேள்வி எழுப்பினாலும், எழுப்பாவிட்டாலும் அவை தொடர்பான புரிதல்கள் அமைச்சர்களுக்கு இருக்க வேண்டும்.

தகவல் அறியும் உரிமை சட்டத்தின் ஊடாக இந்த ஒப்பந்தங்களின் பிரதிகளை ஜனாதிபதி செயலகத்திடம் கோரிய போது, தம்வசம் அவை இல்லை என்ற பதிலே வழங்கப்பட்டது.

எதற்காக இது குறித்த தகவல்கள் மறைக்கப்படுகின்றன? எமது கேள்விக்குப் பதிலளிப்பதற்கான சந்தர்ப்பம் இருந்தும் பிரதமர் ஏன் அதனை புறக்கணிக்கின்றார்? அவ்வாறெனில் அரசு செய்யக் கூடாத ஒன்றைச் செய்துள்ளதா? தெரிந்தோ தெரியாமலோ எமது தாய் நாடு காட்டிக்கொடுக்கப்பட்டுள்ளதா?

பாராளுமன்றத்தில் இந்த ஒப்பந்தங்கள் தொடர்பான ஆவணங்களை சமர்ப்பித்து, அவை குறித்த விவாதங்களை நிறைவுக்கு கொண்டு வர முடியுமல்லவா? ஆனால் அதற்கான தைரியம் அரசாங்கத்துக்கு இல்லை.

நாடாளுமன்றத்தில் பல சந்தர்ப்பங்களில் நாம் இது குறித்து கேள்வி எழுப்பியிருக்கின்றோம். நாடாளுமன்றத்தில் மாத்திரமின்றி பொதுமக்களும் இது தொடர்பில் கேள்வி எழுப்புகின்றனர் என்பதை அரசும் அறியும். மறைக்கக் கூடியவாறான உள்ளடக்கங்கள் இந்த ஒப்பந்தங்களில் காணப்படுகின்றமை கவலைக்குரியதாகும்.

323 கொள்கலன்கள் விவகாரத்திலும் அரசு இவ்வாறுதான் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றது. அனைத்து விடயங்களிலும் தலையிடும் அமைச்சர் பிமல் ரத்நாயக்க இந்த விடயத்தில் அமைதியாகவுள்ளார்.

அறிக்கையைத் தயாரித்துக் கொண்டிருப்பதாகவும், அறிக்கை சமர்ப்பிக்கப்படும் வரை காத்திருக்குமாறும் கூறுகின்றனர். ஆனால், அந்த அறிக்கையைத் தயாரிப்பது சுயாதீன குழு அல்ல.

அரசின் அமைச்சர்களே அந்தக் குழுவில் உள்ளனர். அவர்கள் தமக்கு ஏற்றால்போல் அதனைத் தயாரித்துக் கொள்வர். எனவே, அதில் கூறப்படும் விடயங்களை முழுமையாக ஏற்க முடியாது." – என்றார்.

## சமல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசுகளின்போது முன்னாள் சபாநாயகராகவும், முன்னாள் அமைச்சராகவும் இருந்த சமல் ராஜபக்ஷ, அடுத்த சில நாட்களில் கைது செய்யப்படலாம் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

2022ஆம் ஆண்டு மே 9ஆம் திகதி இடம்பெற்ற வன்முறையின்போது திஸ்ஸமஹாராமவில் உள்ள அவரது வீடு மற்றும் சொத்துக்கள் தீக்கிரையாக்கப்பட்டு அழிக்கப்பட்டன எனத் தவறான தகவலை அளித்துள்ளார் என குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

அதற்காக அரசிடம் இருந்து ஒரு கோடியே 50 இலட்சத்து 21 ஆயிரத்து 600 ரூபா மோசடி செய்த குற்றச்சாட்டில் சமல் ராஜபக்ஷ விசாரணைக்கு உட்படுத்தப்படவுள்ளார் எனத் தெரியவருகின்றது.

திஸ்ஸமஹாராமவில் உள்ள சொத்து சமல் ராஜபக்ஷவுக்குச் சொந்தமானது அல்ல. மாறாக, அது வேறொருவரின் பெயரில் உள்ளது என்பது இப்போது தெரியவந்துள்ளது.

மேலும், அங்கு வீடு இல்லை எனவும், அங்கு நெல் களஞ்சியசாலை மட்டுமே இருந்ததாகவும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அந்தச் சொத்து சமல் ராஜபக்ஷவுக்குச் சொந்தமானது அல்ல என்பது தெரியவந்ததை அடுத்து, 2023ஆம் ஆண்டு 7ஆம் மாதம் 27ஆம் திகதி அன்று, பொது நிர்வாகம், உள்துறை, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரின் கையொப்பத்தின் கீழ், குறித்த கொடுப்பனவுகளைத் தங்கள் அதிகார வரம்பின் கீழ் செய்ய முடியாது என இழப்பீட்டு அலுவலகத்தின் பணிப்பாளர் நாயகத்துக்குத் தெரிவித்துள்ளார்.

எனினும், 2023ஆம் ஆண்டு 7ஆம் மாதம் 20ஆம் திகதி மதிப்பீட்டுத் துறையின் மதிப்பீட்டாளர் ஒருவர், அங்கு ஒரு வீடு இருந்ததாகவும், அதன் மதிப்பு ஒரு கோடியே 48 இலட்சம் ரூபா எனவும் கூறி மதிப்பீட்டு அறிக்கையைச் சமர்ப்பித்துள்ளார்.

அதற்கமைய, நெல் களஞ்சியத்துக்கு ஏற்பட்ட சேதம் 2 இலட்சத்து 22 ஆயிரத்து 600 ரூபா மற்றும் இல்லாத வீட்டுக்கு ஒரு கோடியே 48 இலட்சம் ரூபா பெற்றுள்ளனர். அரசிடம் இருந்து ஒரு கோடியே 50 இலட்சத்து 21 ஆயிரத்து 600 ரூபாவை சமல் மோசடியாகப் பெற்றுள்ளார் எனக் குற்றஞ்சாட் டப்பட்டுள்ளது.

இந்தத் தொகையைச் செலுத்துவது தொடர்பான சட்டம் மற்றும் சுற்றறிக்கைகளுக்கு மாறாகச் செயற்பட்ட அரச அதிகாரிகள் மீதும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது எனக் கூறப்ப டுகின்றது.

# பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் சம்பள அதிகரிப்பு தொடர்பில் நடவடிக்கை

## பிரதமர் ஹரிணி தெரிவிப்பு



பல்கலைக்கழக விரிவுரையாளர் தொழிற்சங்கச் சம்மேளன உறுப்பினர்களுக்கும் பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூர்யவுக்கும் இடையில் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் சம்பள அதிகரிப்பு உள்ளிட்ட பல விடயங்கள் குறித்து இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளது.

அத்துடன், பல்கலைக்கழகத்தில் பணி புரியும் கல்விசாரா பணியாளர்களினதும் விரிவுரையாளர்களினதும் சம்பளத்தில் பாரிய வேறுபாடு காணப்படுவதாகவும் பல்கலைக்கழக விரிவுரையாளர் தொழிற்சங்கச் சம்மேளனம் இதன்போது சுட்டிக்காட்டியுள்ளது

விரிவுரையாளர்களின் சம்பளம் தொடர்பில் அடுத்தகட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என பிரதமர் ஹரிணி அமரசூர்ய இதன்போது தெரிவித்துள்ளார்.



## செம்மணி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மன்றத்தின் பாதுகாப்பில் வைப்பிலிடுவார் எனவும் சட்டத்தரணி ரனித்தா ஞானராஜா தெரிவித்தார்.

செம்மணி – சிந்துப்பாத்தி இந்து மயானத்தில் அபிவிருத்திப் பணிகளுக்காக நல்லூர் பிரதேச சபையால் கடந்த பெப்ரவரிமாதம் குழிகள் வெட்டப்பட்டபோது மனிதச்சிதிலங்கள் பல மீட்கப்பட்டிருந்தன.

அதனையடுத்து அகழ்வுப் பணிகள் கடந்த மே மாதம் 15ஆம் திகதி யாழ்ப்பாணம் நீதவான் நீதமன்ற நீதிபதி ஆ. ஆனந்தராஜாவின் மேற்பார்வையில் ஆரம்பமாகின. இரண்டு நாள்கள் அகழ்வு பணிகள் நடைபெற்ற நிலையில் யாழ்ப்பாணத்தில் பெய்த மழை காரணமாகப் பணிகள் இடைநிறுத்தப்பட்டன.

பின்னர் மீண்டும் இந்த மாதம் 2ஆம் திகதி அகழ்வுப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு நேற்று சனிக்கிழமை வரையில் நடைபெற்ற அகழ்வுப் பணிகளில் 19 மனித எலும்புக்கூடுகள் முழுமையாக மீட்கப்பட்டுள்ளன.

அதேவேளை குறித்த பகுதியை மனித புதைகுழியாகப் பிரகடனப்படுத்துமாறும், மேலும் அகழ்வுப் பணிகளை முன்னெடுக்க அனுமதி வேண்டும் எனவும் சட்டத்தரணிகள் கடந்த வாரம் யாழ். நீதிவான் நீதிமன்றத்தில் விண்ணப்பம் செய்திருந்த நிலையில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை மூன்றாம் கட்ட அகழ்வுப் பணிகளை முன்னெடுக்க 45 நாள்கள் வழங்கிய மன்று, அந்தப் பகுதியை மனிதப் புதைகுழியாகவும் குற்றப் பகுதியாகவும் பிரகடனப்படுத்தி இருந்தது.

இந்நிலையில் 45 நாள்கள் அகழ்வுப் பணிக்கான பாதீட்டை சட்ட வைத்திய அதிகாரி செல்லையா பிரணவன் யாழ். நீதிவான் நீதிமன்ற நீதிபதி ஆ. ஆனந்தராஜாவிடம் நேற்று ஒப்படைத்தார்.

இதற்கமைய அடுத்த மூன்றாம் கட்ட அகழ்வுப் பணிக்கான உத்தேச திகதியாக ஜூன் 26ஆம் திகதியை நீதிவான் அனுமதித்துள்ளார். குறித்த உத்தேச திகதிக்குள் சமர்ப்பிக்கப்பட்ட பாதீட்டின் நிதி கிடைக்கப் பெற்றால் மூன்றாம் கட்ட அகழ்வுப் பணி குறித்த திகதியில் ஆரம்பமாகும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.








# மின்சார கட்டண குறித்து விரைவில் இறுதி முடிவு

## பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தகவல்

அடுத்த 6 மாதங்களுக்கான மின்சாரக் கட்டணத்தை நிர்ணயிக்கும் செயல்முறை தற்போது இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளதாக பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

மின்சார கட்டண திருத்தம் குறித்த இறுதி முடிவு அடுத்த சில நாட்களில் அறிவிக்கப்படுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பான பொது ஆலோசனை கடந்த 3ஆம் திகதியுடன் நிறைவடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.



# அனைத்துத் ரயில் நிலையங்களினதும் சமிக்ஞை கட்டமைப்புகள் பரிசோதனை

நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து ரயில் நிலையங்களினதும் சமிக்ஞை கட்டமைப்புகள் விசேடப் பரிசோதனைக்கு உட்படுத்தப்படும் என ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

ரயில்வே திணைக்களப் பொது முகாமையாளர் தம்மிக்க ஜயசுந்தர இதனைத் தெரிவித்துள்ளார்.

இதன்படி, கரையோர மார்க்கத்தில் கொழும்பு கோட்டையிலிருந்து களுத்துறை வரையான ரயில் சமிக்ஞை கட்டமைப்பில் நேற்றும் இன்றும் பரிசோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

அத்துடன், பாணந்துறையிலிருந்து மொரட்டுவ வரையிலான ரயில் மார்க்கத்தின் சமிக்ஞை கட்டமைப்புகள் சீராக உள்ளன என அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

பாணந்துறை மற்றும் எகொட உயன ரயில் நிலையங்களுக்கு இடையிலான பகுதியில் உள்ள தண்டவாளத்தில் ஏற்பட்ட பழுது காரணமாகக் கொழும்பு கோட்டை நோக்கிப் பயணித்த சாகரிக்கா ரயில் நேற்று முன்தினம் இடைநடுவே நிறுத்தப்பட்டது.

எனினும் சமிக்ஞை கோளாறு காரணமாகக் கொழும்பு கோட்டை நோக்கிப் பயணித்த மற்றுமொரு ரயிலும் அதே மார்க்கத்தில் பயணித்தது.

பின்னர் அதன் இயக்குநரின் உடனடி நடவடிக்கையால் குறித்த ரயில் நிறுத்தப்பட்டதுடன் ஏற்படவிருந்த விபத்தும் தவிர்க்கப்பட்டது.

இந்தநிலையில், நாடளாவிய ரீதியாக உள்ள சகல ரயில் மார்க்கத்திலும் காணப்படும் சமிக்ஞை கட்டமைப்புகளைப் பரிசோதனைக்கு உட்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.





# சமூக ஊடகங்களில் காலாவதியான கிரீம் விற்பனை செய்த கடைகள் சுற்றிவளைப்பு

சமூக ஊடகங்கள் ஊடாக காலாவதியான கிரீம் வகைகளை விற்பனை செய்து வந்த இரு கடைகளை பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை அதிகாரிகள் சுற்றிவளைத்துள்ளனர்.

கொழும்பு இராஜகிரிய ஒபேசேகரபுர மற்றும் அம்பகஹ சந்தி ஆகிய பகுதிகளில் உள்ள இரு கடைகளையே பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை அதிகாரிகள் சுற்றிவளைத்துள்ளனர்.

இந்த இரு கடைகளின் உரிமையாளர், வெளிநாட்டில் தயாரிக்கப்படும் கிரீம் வகைகளின் காலாவதி திகதியை மாற்றி அதனை சமூக ஊடகங்கள் ஊடாக விற்பனை செய்து வந்துள்ளதாக பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த இரு கடைகளிலும் இருந்த அனைத்து கிரீம் வகைகளையும் பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர்.

இது தொடர்பில் பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை அதிகாரிகள் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.




# சப்ரகமுவ பல்கலை முறைக்கேடுகள் குறித்து விசாரிக்க சுயாதீன குழுவை நியமிக்குமாறு கோப் குழு பரிந்துரை

சப்ரகமுவ பல்கலைக்கழகத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் ஊழல் மற்றும் முறைக்கேடுகள் குறித்து விசாரிப்பதற்காகச் சுயாதீன குழுவொன்றை நியமிக்குமாறு கோப் குழு பரிந்துரைத்துள்ளது.

அத்துடன், தற்போதுள்ள கட்டுப்பாட்டு அதிகாரியைக் குறித்த குழுவில் உள்ளடக்காமல் சுயாதீன குழுவை நியமிக்குமாறு கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சின் செயலாளருக்கு கோப் குழு பரிந்து ரைத்துள்ளது.

சப்ரகமுவ பல்கலைக்கழகத்தில் இரண்டாம் கல்வியாண்டில் பயின்ற சரித் டில்சான் என்ற மாணவன் தமது உயிரை மாய்த்துக் கொண்டமை தொடர்பில் கோப் குழுவில் விரிவாகக் கலந்துரையாடப்பட்டுள்ளது.

குறித்த மாணவன் உயிரை மாய்த்துக்கொண்ட சம்பவம் குறித்து முறையான விசாரணைகளைப் பல்கலைக்கழக நிர்வாகம் முன்னெடுக்கவில்லை என கோப் குழுவின் தலைவர் இதன்போது தெரிவித்துள்ளார்.

இதற்கான விசாரணைகளை முன்னெடுப்பதற்காகச் சுயாதீன குழுவொன்றை நியமிக்குமாறும் இதன்போது பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

மாணவர் விடுதிகளில் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவுள்ள புதிய திட்டங்கள் குறித்தும் பல்கலைக்கழக நிர்வாகத்துக்கு ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளதாக கோப் குழுவில் முன்னிலையாகியிருந்த அதிகாரிகள் குறிப்பிட்டனர் என நாடாளுமன்றத் தொடர்பாடல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## காத்திருக்கும் 'ஷொக்'!

நாட்டு மக்களுக்கு அதிர்ச்சி தரும் - 'ஷொக்' அடிக்கும் - செய்தி ஒன்று அடுத்த வாரத்தில் காத்திருப்பதாக தெரிகிறது.

மின் கட்டண உயர்வு குறித்த தனது பரிந்துரைகளை பொதுப்பயன்பாடுகள் ஆணைக் குழு அடுத்த வாரத்தில் வெளியிட இருப்பதாகச் செய்திகள் வெளியாகி உள்ளன.

அதிலேயே மின் கட்டண உயர்வு பற்றிய அதிர்ச்சி அறிவிப்பு வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மின் கட்டண பரிந்துரைகள் தொடர்பான விடயத்தில் பொது கருத்துக்களை ஒன்பது மாகாணங்களில் இருந்தும் பொது பயன்பாடுகள் ஆணைக்குழு சேகரித்து இருந்தது. அதற்கான காலம் கடந்த வியாழக்கிழமை முடிவடைந்ததை அடுத்து, அவற்றை கணக்கில் எடுத்துத் தன்னுடைய தீர்மானத்தை பரிந்துரையாக பொது பயன்பாடுகள் ஆணைக்குழு வெளியிடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இலங்கை மின்சார சபையின் கோரிக்கைகள், மின் உற்பத்திச் செலவுகளின் உயர்வு குறித்த அறிக்கைகள் மற்றும் பொது முன்மொழிவுகள் ஆகியவற்றைக் கணக்கெடுத்து, மதிப்பீடுகளைச் செய்த பின்னர் பொதுப் பயன்பாட்டு ஆணை குழு தனது முடிவை அறிவிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மின் உற்பத்திச் செலவுகள் அதிகரித்து இருப்பதால் மின்சார கட்டணத்தை 18.3 வீதம் அதிகரிக்க வேண்டும் என்று இலங்கை மின்சார சபை கோரிக்கை முன் வைத்துள்ளது.

அதை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு ஏற்றுக் கொள்ளுமா அல்லது குறைந்த கட்டண உயர்வுக்குத்தான் அது அனுமதி அளிக்குமா என்பது தெரியவில்லை.

எது, எப்படியானாலும் மின் கட்டண உயர்வு பற்றிய அறிவிப்பு அடுத்த வாரத்தில் வெளிவருவது பெரும்பாலும் தவிர்க்க முடியாததாக இருக்கும் என்று விடயம்அறிந்தவட்டாரங்கள்கூறுகின்றன.

மின் கட்டண உயர்வு நிச்சயம். அது எவ்வளவு வீதம் என்பதுதான் இப்போது தீர்மானிக்கப்பட வேண்டியுள்ளது விடயம் என சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் மேலும் தெரிவிக்கின்றன.

இப்போதைய நிலையில் மின் கட்டண உயர்வு என்பது ஒரு புறம் மக்களுக்கு அதிர்ச்சி அளிப்பதாக இருக்கும் அதே சமயம், மறுபுறம் இலங்கையின் நலிந்த பொருளாதாரத்தில் மேலும் பாதகமான விளைவுகளை அது ஏற்படுத்தும் என்றும் சுட்டிக்காட்டப்படுகிறது.

மின் கட்டண உயர்வு எல்லாத் துறைகளிலும் விலைவாசி மற்றும் சேவை கட்டணங்கள் யாவற்றையும் நேரடியாகப் பாதித்து, அவற்றிலும் உயர்ச்சியை ஏற்படுத்தும் என்பது புரிந்து கொள்ளத் தக்கதே.

கடந்த ஜனவரி முதல் ஆறு மாதங்களுக்கு மின் கட்டணம் கணிசமான அளவில் குறைக்கப்பட்டு இருந்தது. அது, பொது மக்களுக்கு ஆறுதலைத் தந்ததோடு சுமையையும் குறைத்தது. அந்த ஆறு மாதங்கள் முடிவடையும் நிலையில் புதிய கட்டண நிர்ணயம் இப்போது இடம் பெறவுள்ளது. அதன் போதே கட்டண அதிகரிப்பு கணிசமான அளவில் இடம்பெறுமென எச்சரிக்கப்படுகின்றது.

இலங்கை மின்சார சபை கேட்பது போல கட்டணத்தை ஐந்தில் ஒரு அளவு உயர்த்தினால், அது பல்வேறு தாக்கங்களை மக்களின் வாழ்க்கைச் செலவில் ஏற்படுத்தும் என்பது தவிர்க்க முடியாததாக இருக்கும்.



# டெங்கு நோயாளர்கள் 23,000 ஐ கடந்தனர்

இந்த ஆண்டின் முதல் ஐந்து மாதங்களில் நாட்டில் மொத்தமாக 23,744 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவின் தரவுகள் தெரிவிக்கின்றன.

மாதாந்த டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை படிப்படியாக அதிகரித்து வருகின்றமை அவதானிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, கடந்த மார்ச் மாதத்தில் 3,766 நோயாளர்களும் ஏப்ரல் மாதத்தில் 5,166 நோயாளர்களும் மே மாதத்தில் 6,042 நோயாளர்களும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

கொழும்பு, கம்பஹா, இரத்தினபுரி மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் அதிக எண்ணிக்கையிலான டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

இதனிடையே இந்த ஆண்டின் இது வரையான காலப்பகுதியில் 13 டெங்கு தொடர்பான மரணங்களும் பதிவாகியுள்ளன என தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவின் தரவுகள் தெரிவிக்கின்றன.

பருவமழை தொடங்குவதால் நுளம்புகளின் பெருக்கம் அதிகரித்து, டெங்கு நோய் பரவல் மேலும் அதிகரிக்கக்கூடும் என சுகாதார அதிகாரிகள் எச்சரிக்கின்றனர்.




# தொழிற்சங்க நடவடிக்கையினைத் தொடர்வதற்கு மருத்துவ ஆய்வுகூட நிபுணர்கள் சங்கம் தீர்மானம்

தற்போது முன்னெடுத்துள்ள தொழிற்சங்க நடவடிக்கையைத் தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்லவுள்ளதாக மருத்துவ ஆய்வுகூட நிபுணர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

பதவி உயர்வு தாமதம் மற்றும் இணை சுகாதார பட்டதாரிகளை ஆட்சேர்ப்பு செய்வதில் உள்ள சிக்கல்கள் உள்ளிட்ட 5 பிரச்சினைகளுக்கு சுகாதார அமைச்சு தீர்வு வழங்காமையினால் இந்த தீர்மானத்தை எடுத்துள்ளதாக அந்த சங்கத்தின் தலைவர் ரவி குமுதேஷ் தெரிவித்துள்ளார்.

இந்த பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுமாறு கோரி கடந்த வியாழக்கிழமை முதல் நிறைவுகாண் மருத்துவ நிபுணர்களின் தொழிற்சங்க ஒன்றியம் பணிப்புறக்கணிப்பை முன்னெடுத்திருந்தது.

பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்ட தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகள், ஜனாதிபதி பொதுமக்கள் ஒருங்கிணைப்பு அலுவலகத்தில் கலந்துரையாடல்களில் ஈடுபட்டனர்.

இந்த கலந்துரையாடல்களைத் தொடர்ந்து, மேற்படி தொழிற்சங்கங்களின் நிர்வாக சங்கம் நேற்று முன்தினம் இரவு கூடியிருந்த நிலையில், பணிப்புறக்கணிப்பு போராட்டத்தை நேற்று காலை முதல் தற்காலிகமாகக் கைவிட 4 தொழிற்சங்கங்கள் நடவடிக்கை எடுத்திருந்தன.

எவ்வாறாயினும், ரவி குமுதேஷ் தலைமையிலான மருத்துவ ஆய்வுகூட நிபுணர்கள் சங்கம் பணிப்புறக்கணிப்பை தொடர்வதற்குத் தீர்மானித்துள்ளது.

இந்த பணிப்புறக்கணிப்பு காரணமாக, சில வைத்தியசாலைகளில் மருத்துவ ஆய்வுகூட சேவைகளைப் பெற முடியாமல் போனமையினால் நோயாளர்கள் சிலர் பாரிய சிரமத்தை எதிர்கொண்டிருந்தனர்.

# அசிங்கமான அரசியல்





வி.எஸ்.சிவகரன்

அரசியல் என்பது மக்களுக்காக, மக்கள் நலன் சார்ந்து, பணி செய்வதும், மக்களோடு மக்களாக இரண்டறக் கலந்து இருப்பதும், அந்த மக்களின் உணர்வுகளுடன் உளத்தூய்மையோடு உறவாடுவதுமே இடதுசாரி அரசியலின் தத்துவார்த்தக் கோட்பாடு. வலதுசாரிகள் வாக்கையே மூலதனமாக நோக்குவார்கள். இடதுசாரிகள் மக்களின் வாழ்வியலையே அரசியலாக கருதுவார்கள்.

ஆனால் தமிழ்த் தேசிய அரசியல் என்பது இவ்விரண்டையும் கடந்தது இன விடுதலை என்கின்ற கோட்பாட்டுச் சித்தாந்தத்தையும் நீண்ட நெடிய விடுதலைத் தாகத்தை அடைய முடியாமல் உள்ள தாயக கனவையும் நினைவுகளாக நெஞ்சில் சுமந்து கொண்டு, தேசம் பறி போய்விட்டது, தேசியத்தையாவது காப்பாற்ற வேண்டும் என்கின்ற பற்றுதியுடன், பல்வேறு விதமான அடக்குமுறை ஒடுக்கு முறைகளுக்குள்ளால் வலி சுமந்து, வாழ்வு நெடுகலும் அவமானங்களோடும் விமர்சனங்களோடும் பயணிக்கும் தோற்கடிக்கப்பட்ட இனத்தின் பிரதிநிதிகளாக இருக்கிறோம் என்பதனை மறந்து, சந்தர்ப்பவாத, பதவி முதல் வாத, அரசியல் இருப்பை தமிழர் தாயகத்தில் கட்டமைக்க முனைகின்றார்கள்.

தமிழ்த் தேசியம் பேசும் கட்சிகள் விடுதலைக்குப் போராடிய இனம் எவ்விதமான அதிகாரமும் இல்லாத உள்ளூராட்சி மன்றங்களில் ஆட்சி அமைப்பதற்கு அதிகார வெறி கொண்டு, ஒட்டுக் குழுக்கள் என ஓரம் கட்டியவர்கள் இடத்திலும் கையேந்தி நிற்பது அரசியல் யாசகம். இது அசிங்கமானது. அற்பத்தனமானது. பிற்போக்குத்தனமானது. எந்த வகையிலும் நியாயப் படுத்த முடியாதது.

கடந்த வாரம் முழுவதும் சமூக ஊடகங்களிலே மாறி மாறி "துரோகி", "தியாகி" என்னும் பெயர்கள் வைரலாகி வந்தன. யாரை யாருக்கு துரோகி என்பது? தியாகி என்பது? தமிழர் அரசியலிலே துரோகி பட்டம் கொடுப்பதற்காக இருந்த அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் தலைமையிலான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி இப்பொழுது அவர்களால் விமர்சிக்கப்பட்ட துரோகிகளை தனது சக பாடிகளாக வரித்துக் கொண்டுள்ளது.

கொள்கை கோட்பாடு என கடந்த 15 ஆண்டுகளாக உரத்துப் பேசி வந்தவர்கள் இப்பொழுது கேவலம் உள்ளூராட்சி பதவிகளுக்காக சந்தர்ப்பவாதிகளாக மாறி விட்டார்கள்.

சந்திரகுமாரையும் சித்தார்த்தனையும் வைத்துக் கொண்டு கொள்கையை எப்படி பேசுவது? சுரேஷ் பிரேமசந்திரனையும், அடைக்கலநாதனையும் வைத்துக்கொண்டு இனிமேல் இந்திய அடிமை எனவும், பதின் மூன்றின் நண்பர்கள் எனவுன் யாரை விமர்சிப்பது?

கொள்கை இல்லாமல் கட்சி மாறுபவர்கள் எனவும், சந்தர்ப்பவாதிகள் என்று குறிப்பிடுகின்ற சிறீகாந்தா – சிவாஜிலிங்கத்தை வைத்துக்கொண்டு என்ன கூறப் போகிறார்கள்?

"க.குமார்" எனக் குறிப்பிட்டுத் தலைப்புச் செய்தி எழுதிய சரவணபவனை வைத்துக்கொண்டு கொள்கை கூட்டு என்கிறார்கள். இவர்கள் எவரிடத்திலும் கொள்கையும் இல்லை, கோட்பாடும் இல்லை. விடுதலைப் புலிகளையோ மாவீரர்களையோ தியாகங்களையோ உதட்டளவில் கூட உச்சரிப்பதற்கு இவர்களுக்கு எந்த தகுதியும் இனி மேல் இல்லை.

உள்ளூராட்சி மன்றங்களிலே ஆட்சி அமைப்பதன் ஊடாக தமிழீழத்திற்கு வாக்கெடுப்பு நடத்தவா போகிறார்களா? அல்லது செவ்வாய் கிரகத்திற்கு ஆராய்ச்சிக்கு போக போகிறார்களா? ஊழல் செய்து பணம் சம்பாதிப்பதற்குத் தானே இவ்வளவு ஆசைப்படுகிறார்கள்...?

சுமந்திரனைத்தான் சுத்துமாத்து என விமர்சித்தார்கள். இப்போது அதைவிட பன்மடங்கு சுத்து மாத்து விடுவதிலும், பொய் பேசுவதிலும், புரட்டிப் பேசுவதிலும் பெரு வளர்ச்சி பெற்று விட்டார் கஜேந்திரகுமார். சுமந்திரனின் பாடசாலையில் "கெற்மாஸ்டர்" ஆகிவிட்டார். இந்தச் சந்தர்ப்பவாதிகளோடு கூட்டமைப்பதற்கு அவருக்கு எல்லாத் தகுதிகளும் வந்துவிட்டன.

பத்தோடு பதினொன்று. அத்தோடு இவரும் ஒன்றாகி விட்டார். காலம் பலரது முகத்திரைகளைக் கிழித்து வீசி இருக்கிறது. தமிழரசுக் கட்சி உள்ளூராட்சி மன்றங்களை ஆட்சி அமைப்பதற்கு ஏன் இவ்வளவு

தொடர்ச்சி▼



# அசிங்கமான அரசியல்



தொடர்ச்சி▲

அவசரப்படுகிறது? ஜனநாயகத் தமிழ்த் தேசிய கூட்டணியோடு பேச்சுவார்த்தை நடத்தியவர்கள் இறுதி இணக்கத்தை ஏற்படுத்தி ஆட்சி அமைத் திருக்க வேண்டும்.

அவர்கள் கேட்ட சபைகளில் சிலவற்றை வழங்கி இருக்க வேண்டும். கூட்டு என்பது பரஸ்பரமாக உதவு வதே. சிறிய கட்சி, பெரிய கட்சி என்பதற்கு அப்பால் இருவருக்கும் நன்மை பயப்பதே கூட்டு. அதைப் புரிந்து கொள்ளாமல், “நீங்கள் கேட்கும் இடத்தில் இல்லை, ஆதரிக்கும் இடத்திலே இருக்கிறீர்கள்” என சிவஞ்ஞானம் கடும் தொனியில் கூறினார் எனப் பேச்சு வார்த்தையில் கலந்து கொண்ட ஒருவர் கூறினார். இரு தரப்பு உரையாடலில் இவ்விதமான கடுமையான வார்த்தைகளை அள்ளி வீசுவது என்பது ஐக்கியத்தை ஏற்படுத்துவதற்கு ஒருபோதும் வாய்ப்பைத் தராது.

தமிழரசுக் கட்சி நடந்து முடிந்த உள்ளூராட்சி தேர் தலை சரியாக கையாளவில்லை. வேட்பாளர் தெரி விலே அக்கறை செலுத்தவில்லை. மாவட்ட அளவி லும் தொகுதி அளவிலும் அவர்களுக்கு அதிகாரத்தை வழங்கியது மிகப்பெரிய தவறு. வேட்பாளர் தெரிவுக் குழு ஏற்படுத்தப்பட்டு, மத்திய குழுவால் மேற்பார்வை குழு அமைக்கப்பட்டிருக்க வேண்டும். அல்லது செயலாளர் ஒவ்வொரு மாவட்டங்களுக்கும் சென்று பொறுப்போடு அதனை செயல்படுத்தியிருக்க வேண்டும். பெயரளவில் செயலாளரால் கூட்டங்கள் கூட்டப்பட்டனவே தவிர, பொறுப்புடன் அக்கறை செலுத்தி வேட்பாளர்களைஜ் களத்தில் நிறுத்தவில்லை. அதுதான் பின்னடைவுக் குப் பிரதான காரணம்.

கட்சியால் கூட்டுச் சேர்ந்து பரப்புரை கூட்டங்களை நடத்தப்படவில்லை. ஆங்காங்கே தலைவர்கள் தங்கள் இயலுமையின் அடிப்படையில் மாவட்ட நிலையில் சில கூட்டங்கள் நடத்தினர். தமிழரசுக் கட்சி கடந்த காலத்தில் இவ்வாறு ஒருபோதும் நடந்து கொண்டது இல்லை. மிகப் பலவீனமான முறையிலேயே இந்தத் தேர்தலை எதிர்கொண்டது. ஆனாலும் மக்களுக்கு வீட்டு சின்னத்தின் மேல் உள்ள அபிமானத்தின் அடிப்படையில் ஓரளவுக்கு வாக்களித்தார்கள். ஒழுங் காக வேட்பாளர் நியமனத்தை கவனித்திருந்தால் இன்றைக்கு ஏனைய கட்சிகளிடம் படி ஏற வேண்டிய அவசியம் இருந்திருக்காது. இதற்கு காரணம் பதில் பொதுச் செயலாளர் சுமந்திரன் அவர்களே. அவர் அக்கறையும் ஆளுமையும் செலுத்தவில்லை. மாவை சேனாதிராஜா செயலாளராக இருந்த காலத்தில் கூட இவ்வாறு நடந்து கொள்ளவில்லை. கட்சிகளில் மாவட்ட அதிகாரப் பகிர்வு என்பது சாத்தியமற்றது.

சிவஞ்ஞானம் - சுமந்திரன் இணை ஜோடிகளின் தலைமைத்துவ நிர்வாகத் திறன் என்பது சந்தி சிரிக் கும் அளவுக்கு வந்திருக்கிறது. தன்னை நிரூபிக் காதவன் தலைவனாக முடியாது. தலைமை தாங் கவும் முடியாது. இருவருக்கும் வயது போனதே தவிர, அரசியல் அனுபவம் இருக்கவில்லை.

தமிழரசு கட்சியின் தலைவர் தேர்வுக்கான தேர்தல், நாடாளுமன்றத் தேர்தல், உள்ளூராட்சி மன்ற தேர் தல், தேர்தலுக்குப் பின்னர் கூட்டணி அமைப்பதில் தந்திரோபாயம்(இதன் மூலம் கட்சியை முன்னோக்கி நகர்த்தி இருக்க வேண்டும். அப்போதுதான் தொண்

தொடர்ச்சி▼



# அசிங்கமான அரசியல்




தொடர்ச்சி▲

டர்கள் மத்தியில் உற்சாகமும் புதிய நம்பிக்கையும் ஏற்படும்.) இந்த நான்கு விடயங்களிலும் சுமந்திரன் தலைமைத்துவம் கேள்விக்குட்பட்டு நிற்கிறது. தனக்கு நிர்வாக அறிவு இல்லை, தன்னால் நிர்வாகம் செய்ய முடியாது எனக் கடந்த காலத்தில் சுமந்திரன் பகிரங்கமாக கூறியது இப்பொழுது மெய்ப்பிக்கிறது.

அரசியலில் கட்சிகளுக்கிடையே கூட்டு என்பது நலன் இல்லாமல் நிகழாது இந்தியாவிலேயே கூட்டணிக்கு சேர்க்கின்ற சிறிய கட்சிகளுக்கு ஆசனப் பங்கு கொடுத்து பல கோடி பணமும் வழங்கியே கூட்டில் சேர்த்துக் கொள்கிறார்கள்.

அரசியல் தந்திரமும், மதிநுட்பமும், காய் நகர்த்தும் திறனும், அரசியல் யுக்தியும், சாணக்கியமும் தமிழரசு கட்சி தலைவரிடமும் செயலாளரிடமும் கிஞ்சித்தும் வெளிப்படவில்லை.

பெரிய அண்ணன் மனோநிலை என்பது கூட்டணி பேச்சு வார்த்தைக்கு பயனளிக்காது. இதை அதிகம் படித்தவர்கள் எனக் கூறுவோர் இருவருக்கும் புரியாமல் போனது ஏனோ வேடிக்கைதான். வடக்கு, கிழக்கிலே மிகப்பெரிய கட்சியான தமிழரசு கட்சி ஒட்டுக் குழுக்களில் முதன்மையானது என விமர்சிக்கப்படும் கட்சி காட்டி கொடுத்து, கூட்டி கொடுத்து, கொலை, கொள்ளை, கற்பழிப்பு என பட்டவர்த்தனமான செயற்பாடுகளில் ஈடுபட்ட தரப்பினரை தேடிச் சென்று சந்திப்பது



என்பது அயோக்கியத்தனத்தின் வெளிப்பாடு. இழப்பதற்கு எதுவுமில்லாத இனத்துக்கு தலைமை தாங்கு கின்றோம் என்பதை கூட மறந்து விட்ட துரோகிகளாகவே இவர்களை சமூக ஊடகங்களில் விமர்சனம் கடுமையாக எழுகின்றது.

தலைவருக்கும் செயலாளருக்கும் இழப்பதற்கு எதுவுமில்லை. அவர்கள் பொறுப்பு கூறுவதற்கும் எதுவும் இல்லை. குத்தகைக்கு வந்த கால்பந்தாட்ட வீரர்கள் போல் செயலாற்றுவது வெட்கக்கேடு. அவமானம். யாழ் மாவட்டத்திலேயே 17 உள்ளூர் ஆட்சி மன்றங்களில் ஒன்றைக் கூட அறுதிப் பெரும்பான்மையோடு வெற்றி பெற முடியாதவர்கள் தலைமை பதவியில் இருந்து என்ன பயன்? சுமந்திரன் தமிழ்த் தேசிய அரசியலையும் மக்களினுடைய உணர்வையும் எண்ண ஓட்டத்தையும் இதுவரை புரிந்து கொள்ள வில்லை. தன்னைப் பற்றி விமர்சிப்பவர்கள் எல்லாம் பைத்தியக்காரர்கள், முட்டாள்கள், படிப்பறிவு இல்லாதவர்கள் என்று சுமந்திரன் தொடர்ந்து திமிர் தனமாக பதிலளித்தும் வருகிறார். கையாலாகாத சில செம்புகளை வைத்துக் கொண்டே தனக்கான வீழ்ச்சியை ஏற்படுத்தி வருகிறார். இவருடைய செம்புகளில் எவரும் சமூக நன்மதிப்பு மிக்கவர்களாக இல்லை.

தமிழ் மக்கள் மத்தியில் பொதுநிலை அபிப்பிராயம் இல்லாத ஒருவரால் எந்தச் சந்தர்ப்பத்திலும் வெற்றிகரமான அரசியலை முன்னோக்கி நகர்த்த முடியாது. சுமந்திரன் தன்னை மாற்றிக் கொள்ள வேண்டும். விக்னேஸ்வரன் எப்படி ஓர் ஆண்டில் தன்னை முழுமையாக மாற்றிக் கொண்டாரோ அதேபோல் தன்னை மாற்றிக் கொள்ள வேண்டும். இல்லையேல் இந்த அரசியல் அரங்கில் இருந்து ஒதுங்க வேண்டும். இரண்டில் ஒன்றைத் தவிர, இந்த அரசியலை தான் தீர்மானிக்கும் சக்தியாக மாறலாம் என நினைப்பது முற்றிலும் சாத்தியமற்ற களமாகவே சுமந்திரனுக்கு வெளிப்படுகிறது என்பதனை புரிந்து கொள்ள வேண்டும்.

அவர் தலைமைத்துவத்தின் கீழ் முன்னெடுக்கப்பட்ட எந்த விடயத்திலும் அவரும் வெற்றி பெறவில்லை. கட்சியும் வெற்றி பெறவில்லை. ஆகவே ஜானகி அம்மையார் ஜெயலலிதாவிடம் கட்சியை ஒப்படைத்

தொடர்ச்சி▼

# அசிங்கமான அரசியல்



தொடர்ச்சி▲

தது போல் கட்சியை சிறீதரனிடமோ அல்லது வேறு யாரிடமோ ஒப்படைத்து விட்டு அரசியலில் இருந்து ஒதுங்க வேண்டும். அல்லது தலைமையில் இருந்து மாற வேண்டும். சட்டமன்றம் அல்ல மக்கள் மன்றம் என்பதனை சுமந்திரன் அரசியலுக்கு வந்து இரண்டு தசாப்தத்தில் புரிந்து கொள்ளவில்லை என்பது அல்ல, அவர் புரிந்து கொள்ள வேண்டிய அவசியம் இல்லை என்றே எண்ணுகின்றார் என்றே தோன்றுகின்றது. தமிழ்த் தேசியத்திற்கு இழுக்கு ஏற்படுத்தக்கூடிய ஒவ்வொரு செயலுக்கும் அவரால் கொடுக்கப்படுகின்ற விளக்கங்கள் என்பது மிக மோசமானவை. இந்த தகவல் தொழில்நுட்ப யுகத்தில் நாம் யாரையும் ஏமாற்ற முடியாது. யாருக்கும் உருட்டுப் புரட்டுக் கதைகளை கூற முடியாது. தமிழ் தமிழ் தேசியம் எனும் உயிர் நாடியை அற்ப பதவிகளுக்காய் புறம் தள்ள முடியுமா? தமிழரசு கட்சியின் தலைவர் மக்கள் மத்தியிலே மிக மோசமான நம்பிக்கையினத்தையும் தமிழரசு கட்சியினர் மத்தியில் வெறுப்பையும் மனக்கிலேசத்தையும் தமிழ்த் தேசியவாதிகள் மத்தியில் கடுமையான கோபத்தையும் ஏற்படுத்தியிருக்கிறார். இது தமிழரசு கட்சிக்கு எதிரான நிலைப்பாட்டை எதிர்காலத்தில் தோற்றுவிக்கும். அதன் வாக்கு வங்கியிலே பாரிய சரிவை ஏற்படுத்தும்.

யாழ்ப்பாணத்தில் ஈ.பி.டி.பியுடனும் வன்னியில் றிஷாட் பதியுர்தீனுடனும் கூட்டணி அமைக்க உடன்பாடு தேடுபவர்கள் கிழக்கில் பிள்ளையானுடனும் கூட்டுச் சேரலாமே? வடக்கு மக்களை ஏமாற்றுவது போல் கிழக்கு மக்களை உங்களால் ஒருபோதும் ஏமாற்ற முடியாது. ஒட்டுக் குழுக்களோடு கிழக்கு மக்கள் ஒருபோதும் சேர மாட்டார்கள் என உணர்ந்ததால்தான் கிழக்கில் அந்த முயற்சியை கைவிட்டு விட்டீர்களோ என எண்ண தோன்றுகிறது.

வன்னியிலே றிஷாட் பதியுதீனோடு சேர்ந்து ஆட்சி அமைத்துவிட்டு எதிர்கால அரசியலை தமிழரசுக் கட்சி பூச்சியம் ஆக்கும் முயற்சியிலே இறங்கியுள்ளது. அதிகாரப்பசியோடு ஓநாய்களாக தமிழரசு கட்சியினர் அலைகிறார்களோ? கேவலம் வழிப்போக்கர்களாகி தேர்தல் அரசியலுக்கு வந்தவர்கள் தாயகம், தேசியம், சுயநிர்ணயம் என்கின்ற எந்த கோட்பாட்டுப் புரிதலும் இல்லாதவர்கள், பதவி ஒன்றே இலக்கு என இனத்தை கறுவறுக்கும் நாசகார சக்திகளாக உருப்பெற்று இருக்கிறார்கள். இவர்களால் கட்சியும் இனமும் மிக மோசமான பின்னடைவை எதிர்காலத்தில் சந்திக்கும்.

மூன்றில் இரண்டு பெரும்பான்மை வைத்திருந்த ராஜபக்ஷர்களின் இன்றைய நிலை என்ன என்பதனையும் தமிழரசு கட்சிக்காரர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும். யாழில் கடந்த காலத்தில் ஒன்பது நாடாளுமன்ற உறுப்பினர்களையும் 17 உள்ளூர் ஆட்சி மன்றங்களையும் ஆட்சி செய்த ஈ.பி.டி.பியின் தற்போதைய நிலை என்ன என்பதையும் புரிந்து கொள்ள வேண்டும்.

தமிழரசு கட்சியில் சூடு, சொரணை, தன்மானம், சுய மரியாதை, சமூக நீதி பேசக்கூடிய முதுகெலும்புள்ள எவரும் கட்சியின் மத்திய குழுவில் இல்லையா என கேள்வி எழுகிறது. "வீடு வெள்ளை வான் ஓனருடன், சைக்கிள் வெள்ளை வான் டிரைவருடன்" என சமூக ஊடகங்களில் அதியுச்ச விமர்சனங்களைப் பார்க்க முடிந்தது. இதில் அதிகம் தமிழரசு கட்சி ஆதரவாளர்களும் அங்கத்தவர்களும். அதனால் அதிகம் கவனிப்புக்குரியதாகியது.

தமிழரசு கட்சியின் இன்றைய மத்திய குழு சட்ட விரோதமானது. 2019 ஆம் ஆண்டு தெரிவு செய்யப்பட்ட போது யாப்பின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட வில்லை. தமிழரசுக் கட்சி யாப்பு விதி ஏழு (அ) ஒரு சிரேஷ்ட துணைத் தலைவர், ஒரு துணைப் பொதுச் செயலாளர். ஆனால் இரண்டு சிரேஷ்ட துணைத் தலைவர்களும், இரண்டு துணைப் பொதுச் செயலாளர்களும் தெரிவு செய்யப்பட்டிருந்தனர்.

இது தமிழரசு கட்சியின் யாப்பை மீறிய தெரிவாகும். ஆகவே இந்தச் சட்டவிரோதமான தெரிவால் தலைவர், செயலாளராகப் பதவியை அலங்கரிப்பவர்களும் சட்ட விரோத மத்திய குழுவாலும் எடுக்கப்படுகின்ற தீர்மானங்கள் சட்ட வலுவுடையவை அல்ல. இதற்கு எதிராக யாராவது ஒருவர் நீதிமன்றத்திற்கு சென்றால் மத்திய குழு முழுமையாக செயலிழக்கும் நிலை ஏற்படும்.

இது இன விடுதலை அரசியல் என்பதனை உணர்ந்து கொள்ள வேண்டும். விரும்பாதவர்கள் இனத்தின் அரசியல் அரங்கில் அலங்கரிக்க முனைவது அபத்தமானது. இவ்விதமான அசிங்கமான அரசியலை இந்த தமிழ்க்கட்சிகள் முன்னெடுப்பது இனத்திற்கே அவமானம் ஆகும். மக்களே சிந்தியுங்கள். இவர்கள் இன்னும் தேவைதானா?








# பிளாஸ்ரிக் பைகளுக்கான மாற்று எம் மனங்களிலேயே இருக்கிறது

## சூழல் தின நிகழ்ச்சியில் ஐங்கரநேசன் சுட்டிக்காட்டு

பிளாஸ்ரிக் பைகளின் சொகுசுக்குப் பழக்கப்பட்ட எங்களுக்கு அவற்றைக் கைவிடுவதற்கு மனம் இல்லாமல் இருக்கிறது.பிளாஸ்ரிக் பைகளுக்கு மாற்றாக வேறு பைகள் சந்தைக்கு வராமல் எப்படிப் பிளாஸ்ரிக் பைகளைக் கைவிடுவது என்றே பலரும் கேட்கிறார்கள். பிளாஸ்ரிக் பைகளுக்கான மாற்று வேறு எங்கேயும் இல்லை. எமது மனங்களில்தான் இருக்கிறது. பிளாஸ்ரிக் பைகளைக் கைவிடவேண்டும் என்று உளமார விரும்பி, உறுதியாகத் தீர்மானித்தால் மாற்றுத் தானாக வரும் என்று தமிழ்த் தேசியப்பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் சுட்டிக்காட்டினார்.

உலக சுற்றுச்சூழல் தின நிகழ்ச்சி கடந்த வியாழக்கிழமை யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் நடைபெற்றது. உலக சுற்றுச்சூழல் தினத்தின் இந்த ஆண்டின் “பிளாஸ்ரிக் மாசுபாட்டை இல்லாதொழிப்போம்” என்ற கருப்பொருளுக்கு அமைவாக கல்லூரி அதிபர் சுமதி கந்தசாமி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் பொ.ஐங்கரநேசன் கலந்துகொண்டு சிறப்புரை ஆற்றியபோதே இவ்வாறு சுட்டிக்காட்டியுள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் –

மனிதன் சூழலில் குவித்து வருகின்ற கழிவுகளில் இயற்கைக்கும் மனித உடல்நலத்துக்கும் பெரும் ஆபத்தை விளைவிக்கின்ற கழிவுகளில் பிளாஸ்ரிக் கழிவுகள்தான் முதலிடத்தில் உள்ளன. மண்ணோடு மண்ணாக மக்கிப்போகாத இவை சூழலில் பன்னெடுங்காலம் நீடித்து இருக்கக் கூடியவை. நுண்துகள்களாக உணவுடனும் நீருடனும் சிறுகச் சிறுக எமது உடலினுள் நுழைந்து தேங்கி வருகின்றன. இவற்றை எரிக்கும் போது டையொக்சின் என்னும் நச்சுவாயு வெளியேறுகிறது. இந்த நஞ்சுமனிதர்களில் புற்றுநோய்களையும் மலட்டுத் தன்மையையும் ஏற்படுத்தக்கூடியது.

பிளாஸ்ரிக்கை முற்றாகத் தவிர்க்க முடியாமற் போனாலும் பிளாஸ்ரிக் பைகளையும் ஒரு நாள் பாவித்துவிட்டு வீசுகின்ற பிளாஸ்ரிக்கினால் செய்யப்பபட்ட குவளைகள், தட்டுகள், உணவைப் பொதி செய்யும் பெட்டிகள் போன்றவைகளையும் நாங்கள் முற்றாகவே கைவிடலாம். சூழலில் குவியும் திண்மக் கழிவுகளில் இவற்றின் பங்குதான் மிக அதிகமாக உள்ளன. இவற்றுக்கான மாற்றாகக் கடதாசிப் பைகளையும் துணிப்பைகளையும் பயன்படுத்தலாம். பிளாஸ்ரிக்கை பயன்பாட்டுக்கு வரும் வரைக்கும் நாங்கள் எல்லோரும் இவற்றைத்தானே பயன்படுத்தினோம்.

கடதாசிப் பைகளையும் துணிப் பைகளையும் பாவிப்பதை இன்றைய தலைமுறை நாகரிகக் குறைவானதாகவும் அவமானகரமானதாகவும் கருதுகின்றது. இது எங்கள் மனதில் உள்ள பிரச்சினை. உண்மையில் இயற்கைக்கு இசைவான சூழல் நட்பு மிக்க பொருள்களைப் பயன்படுத்துபவர்களே நாகரிகமானவர்கள். நற்பண்புகளைக் கொண்டவர்கள். அந்த வகையில் பிளாஸ்ரிக் பைகளுக்கான மாற்றை சந்தையில் தேடாமல் முதலில் எமது மனங்களில் மாற்றங்களைத் தேடுவோம். – என்றும் தெரிவித்துள்ளார்.

நிகழ்ச்சியின் இறுதியில் மாணவிகளிடையே சூழல் தொடர்பான வினா விடைப் போட்டி நடாத்தப்பட்டு வெற்றி பெற்றவர்களுக்குத் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தினால் பரிசுகள் வழங்கப்பட்டமையோடு, கல்லூரி வளாகத்தில் மரக்கன்றுகளும் நடுகை செய்யப்பட்டன.








# நிதி மோசடி தண்டனை பெற்றவருக்கு மன்னிப்பு: ஜனாதிபதி, சிறைத் தரப்பு முரண்பட்ட அறிக்கை!

## உண்மை எது எனர் தெளிவுபடுத்தக் கோருகிறார் நிஸாம் காரியப்பர்



(அஸ்லம் எஸ்.மௌலானா)

நிதி மோசடி குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டு, தண்டனை பெற்ற நபருக்கு ஒரு வார காலத்துக்குள் பொது மன்னிப்பு வழங்கப்பட்டதாகக் கூறப்படும் விவகாரம் தொடர்பில் அரசாங்கம் தெளிவுபடுத்த வேண்டும் என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் செயலாளர் நாயகமும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி நிஸாம் காரியப்பர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் –

கடந்த காலத்தில் நிதி மோசடியில் குற்றவாளியாக நிரூபிக்கப்பட்ட டபிள்யூ எச்.அதுல திலகரத்ன என்பவருக்கு ஜனாதிபதியினால் மன்னிப்பு வழங்கப்பட்டதாக சமூக ஊடகங்களில் பரவிய செய்தி, நாட்டில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இதைத் தொடர்ந்து, ஜனாதிபதி ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில், அவர் உத்தியோகபூர்வ ஜனாதிபதி மன்னிப்பு பட்டியலில் இடம்பெறவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிறைச்சாலை திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில், "சட்டத்தின் கீழ் விதிக்கப்பட்ட நடைமுறைகளுக்கு ஏற்ப" இந்த விடுதலை மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்பட்டுள்ளது.

ஜனாதிபதி தரப்பினதும் சிறைச்சாலை திணைக்களத்தினதும் ஒன்றுக்கொன்று முரண்பட்ட தகவல்கள் மக்களில் குழப்பத்தையும் நம்பிக்கையிழப்பையும் உருவாக்குகின்றன. மன்னிப்பின் சட்டப்பூர்வ நிலை பற்றி தெளிவாக தகவல் இல்லாத சூழ்நிலையில், மக்கள் யாரை நம்புவது?

சட்டத்தின் மீது மக்களுக்கு இருக்கும் நம்பிக்கையை பாதுகாப்பது அரசின் பொறுப்பு. குற்றங்களை விட, அவற்றை மறைத்தல் மிகப்பெரிய சமூகத் தீமையாகும்.

எனவே, இந்த விடுதலைக்கான முழுமையான ஆதாரங்களும், தீர்மானங்களும் பொதுமக்களுக்கு வெளிப்படையாக தெளிவுபடுத்தப்பட வேண்டும். – என்று நிஸாம் காரியப்பர் எம்.பி வலியுறுத்தியுள்ளார்.

# வெருகலம்பதியில் எண்ணெய்க் காப்பு சாத்த நேற்று அலைமோதிய பல்லாயிரம் பக்தர்கள்!





(வி.ரி.சகாதேவராஜா)

மட்டக்களப்பு – திருகோணமலை மாவட்டங்களின் எல்லையில் மகாவலி நதி தீரத்திலே அமைந்துள்ள வெருகலம்பதி ஸ்ரீசித்திர வேலாயுத சுவாமி முருகபெருமானுக்கு எண்ணைய்க் காப்பு சாத்த நேற்று சனிக்கிழமை ஆயிரக்கணக்கான அடியார்கள் வரிசையில் அலைமோதினர்.

சுமார் இரண்டு கிலோ மீட்டர் தூரத்திற்கு வரிசை நீண்டிருந்தது.

காலையிலிருந்தே சுமார் ஐயாயிரம் அடியார்கள் வரிசையில் காத்து நின்றனர். காலை 7 மணிக்கு சென்ற ஒரு பக்தர் எண்ணைய்க்காப்பு சாத்த நண்பகல் தாண்டியது.

வெருகலம்பதி ஸ்ரீ சித்திர வேலாயுத சுவாமி முருகபெருமானுக்கும் கஜவல்லி மஹாவல்லி சமேத ஸ்ரீசித்திர வேலாயுத முருகபெருமானுக்கும் ஏனைய பரிபாலன மூர்த்திகளுக்கும் மஹாகும்பாபிஷேகம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 09.00 மணியளவில் கோலாகலமாக இடம்பெறும்.

# ஹஜ்ஜுப் பெருநாள் தொழுகை

## முள்ளிப்பொத்தானையில்...!



(ஹஸ்பர் ஏ.எச்.)

திருகோணமலை மாவட்ட முள்ளிப்பொத்தானை ஈச்ச நகர் பொது விளையாட்டு மைதானத்திலும் ஹஜ் பெருநாள் திடல் தொழுகை இடம் பெற்றது.

இந்தத் திடல் தொழுகையை புஹாரி ஜும் ஆ பள்ளிவாயல், ஈச் விளையாட்டு கழகம்., புஹாரி ஜனாசா நலன்புரி சங்கம் ஆகியன இணைந்து ஏற்பாடு செய்திருந்தன. குத்பா பிரசங்கத்தை மௌலவி முர்ஷித் நிகழ்த்தினார்.

இதில் ஆண்கள்,பெண்கள், சிறுவர்கள் என பெரும்பாலனவர்கள் கலந்து கொண்டு ஹஜ் பெரு நாள் வாழ்த்துக்களைப் பகிர்ந்து கொண்டனர்











# ஹஜ்ஜூப் பெருநாள் தொழுகை

## கற்பிட்டி பாடசாலை மைதானத்தில்...!



(கற்பிட்டி எம்.எச்.எம்.சியாஜ்)

கற்பிட்டி அனைத்து பள்ளி வாசல்களின் ஏற்பாட்டில் ஹஜ்ஜூப் பெருநாள் திடல் தொழுகை பாடசாலை மைதானத்தில் நேற்றுக் காலை வெகு சிறப்பாக இடம்பெற்றது. இதன் போது பெருநாள் குத்பா பிரசங்கத்தையும் தொழுகையும் கற்பிட்டி பெரிய ஜூம்ஆ பள்ளிவாசலின் முன்னாள் பேஷ் இமாம்களான அஷ் ஷெய்க் எம். நிகழ்த்தினார்







# ஹஜ்ஜுப் பெருநாள் தொழுகை

## சாய்ந்தமருது, மாளிகைக்காடு பிரதேசங்களில்...!



(நூருல் ஹுதா உமர், நிப்ராஸ் லத்தீப்)

மாளிகைக்காடு அந் நூர் ஜும்ஆ பெரிய பள்ளிவாசலில் ஹஜ்ஜுப் பெருநாள் தொழுகை வழமை போன்று இம்முறையும் பள்ளிவாசலில் நடைபெற்றது. குத்பா உரையையும், பெருநாள் தொழுகையையும் பள்ளிவாசல் பேஸ் இமாம் அஷ் ஷெய்க் ஏ.எல்.எம் மின்ஹாஜ் (உஸ்மானி) நிகழ்த்தினார்.

மேலும் ஒவ்வொரு வருடமும் சாய்ந்தமருது ஜாமியுல் இஸ்லாஹ் ஜும்மா பள்ளிவாசலின் ஏற்பாட்டில் இடம் பெறும் திடல் தொழுகை இம்முறையும் சாய்ந்தமருது அஸ்ரப் ஐக்கிய பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது. இத் தொழுகையையும், குத்பா பிரசங்கத்தையும் அஷ்ஷெய்க் மௌலவி அபூபக்கர் கலீலுர் ரஹ்மான் (ஸலபி) அவர்கள் நிகழ்த்தி வைத்தார்.







# ஹஜ்ஜீப் பெருநாள் தொழுகை

## மருதமுனை கடற்கரையில்



(ஏ.எல்.எம்.ஷினாஸ் , பாறுக் ஷிஹான்)

மருதமுனை கடற்கரை திறந்த வெளியில் புனித ஈதுல் அழ்ஹா ஹஜ்ஜுப் பெருநாள் தொழுகை நேற்றுக் காலை 6.15 மணிக்கு இடம் பெற்றது. மருதமுனை இஸ்லாமிய பிரச்சார மையத்தின் அனுசரணையோடு அக்பர் ஜும்ஆ பள்ளிவாசல் ஏற்பாடு செய்து நடத்திய இந்த ஹஜ்ஜுப் பெருநாள் தொழுகை மற்றும் அதனைத் தொடர்ந்து இடம்பெற்ற குத்பா பிரசங்கம் என்பவற்றை மருதமுனை தாறுல் ஹுதா மகளிர் அறபுக் கல்லூரியின் பிரதிப் பணிப்பாளர் அஷ்செய்க் ஆர்.நுவீஸ் (மக்கி) அவர்கள் நிகழ்த்தினார்கள். இதில் ஆண்கள், பெண்கள் என ஏராளமானவர்கள் கலந்து கொண்டனர்.













# ஹஜ்ஜுப் பெருநாள் தொழுகை

## கல்முனை ஹுதா திடலில்...!



(எம்.என்.எம்.அப்ராஸ்)

கல்முனை முஹம்மதிய்யா ஜும்ஆ பள்ளிவாசல் மற்றும் ஹுதா ஜும்ஆ பள்ளிவாசல் இணைந்து ஏற்பாடு செய்திருந்த புனித ஹஜ்ஜுப் பெருநாள் தொழுகை கல்முனை கடற்கரை வீதி ஹுதா திடலில் நேற்று இடம்பெற்றது.

பெருநாள் தொழுகையும்,குத்பா பேருரையினையும் மௌலவி ஜே.எம். சாபித் (ஷரயி,ரியாதி) நிகழ்த்தினார். இதில் பெரும் அளவிலான ஆண்களும் பெண்களும் கலந்துகொண்டனர்.










# ஹஜ்ஜுப் பெருநாள் தொழுகை

## மன்னார் மூர்வீதி ஜும்மா பள்ளிவாசலில்...!



(மன்னார் நிருபர்)

மன்னார் மூர்வீதி ஜும்மா பள்ளிவாசலில் நேற்றைய தினம் ஹஜ்ஜுப் பெருநாள் தொழுகைகள் இடம் பெற்றன.

காலை 6.45 மணிக்கு பெண்களுக்கும் காலை 7.30 மணியளவில் ஆண்களுக்கும் பெருநாள் தொழுகை இடம் பெற்றது.

இவ் தொழுகை மூர்வீதி ஜும்மா பள்ளிவாசலின் மௌலவி எம்.அஸீம் தலைமையில் நடைபெற்றது.

இதன் போது ஹஜ்ஜுப் பெருநாளின் முக்கியத்துவம், அல்குர்ஆன் சமய நற்சிந்தனைகள், பற்றியும் இங்கு எடுத்துக் கூறப்பட்டது. துவா தொழுகைகள் இடம் பெற்றன.

மேலும் மாவட்டத்தில் உள்ள ஏனைய பள்ளிவாசல்களிலும் பெருநாள் தொழுகைகள் சிறப்பாக இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.















# தீவிரவாதத்துக்கு எதிரான கொள்கையை நட்பு நாடுகள் புரிந்துகொள்ள வேண்டும்

## வெளியுறவு அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் கோரிக்கை

தீவிரவாதத்துக்கு எதிராக “பூஜ்ஜிய சகிப்புத்தன்மை” கொள்கையை இந்தியா பின்பற்றுகிறது என்றும் நட்பு நாடுகள் இதைப் புரிந்து கொள்ள வேண்டுமென எதிர்பார்க்கிறது எனவும் வெளியுறவு அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

இரண்டு நாள் பயணமாக இந்தியா சென்றுள்ள இங்கிலாந்து வெளியுறவு அமைச்சர் டேவிட் லாம்மி தலைமையிலான குழுவினர், புதுடில்லியில் வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கரைச் சந்தித்தனர். அப்போது அவர்கள் மத்தியில் பேசிய ஜெய்சங்கர்,

“காட்டுமிராண்டித்தனமான பஹல்காம் பயங்கரவாத தாக்குதலை கடுமையாக கண்டித்ததற்கும், பயங்கரவாதத்துக்கு எதிரான இந்தியாவின் போராட்டத்துக்கு இங்கிலாந்து அளித்த ஆதரவுக்கும் நன்றி.

பயங்கரவாதத்துக்கு எதிராக பூஜ்ஜிய சகிப்புத்தன்மை கொள்கையை நாங்கள் கடைப்பிடிக்கிறோம். மேலும், எங்கள் நட்பு நாடுகள் இதைப் புரிந்து கொள்வார்கள் என்று எதிர்பார்க்கிறோம். தீமை செய்பவர்கள் பாதிக்கப்பட்டவர்களுக்கு இணையாக நிறுத்தப்படுவதை நாங்கள் ஒருபோதும் பொறுத்துக்கொள்ள மாட்டோம்.” என்று தெரிவித்தார்.

மேலும் அவர், சமீபத்தில் இறுதி செய்யப்பட்ட இந்தியா – இங்கிலாந்து இடையேயான தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் மற்றும் இரட்டை பங்களிப்பு மாநாடு ஆகியவை உண்மையிலேயே ஒரு மைல்கல் என்று குறிப்பிட்டார். இந்த சந்திப்பின்போது, பாகிஸ்தானின் எல்லை தாண்டிய பயங்கரவாதம் குறித்த பிரச்சினையை இந்தியத் தரப்பு எழுப்பியதாகத் தெரிகிறது.

கடந்த மாதம் இந்தியா மற்றும் பாகிஸ்தானுக்கு இடையே ஏற்பட்ட இராணுவ மோதலின்போது பதற்றங்களைத் தணிக்கும் முயற்சியில் இரு நாடுகளுடனும் தொடர்பில் இருந்த நாடுகளில் இங்கிலாந்தும் ஒன்று. இரண்டு நாள் பயணமாக மே 16 ஆம் திகதி இஸ்லாமாபாத் சென்ற இங்கிலாந்து வெளியுறவு அமைச்சர் டேவிட் லாம்மி, இராணுவ நடவடிக்கைகளை நிறுத்த இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே மே 10 அன்று ஏற்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தை வரவேற்றார்.



# இந்தியாவில் 5,755 பேருக்கு கொவிட் தொற்று அடையாளம்

இந்தியாவில் கொவிட் தொற்றினால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 5,755 ஆக உயர்ந்துள்ளதாக இந்திய ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

புதிய கொவிட் அலையின் தாக்கம் காரணமாக கேரளா, குஜராத் உள்ளிட்ட மாநிலங்களில் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

நேற்று முன்தினம் புதிதாக 319 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

கேரளாவில் 1,806 தொற்றாளர்களும், குஜராத்தில் 717 தொற்றாளர்களும், டில்லியில் 655 தொற்றாளர்களும், மேற்கு வங்காளத்தில் 622 தொற்றாளர்களும் பதிவாகியுள்ளனர் என இந்திய ஊடகங்கள் குறிப்பிட்டுள்ளன.

அதேநேரம், மகாராஷ்டிராவில் இதுவரையில் 577 தொற்றாளர்களும், தமிழ்நாட்டில் 194 தொற்றாளர்களும் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அமெரிக்க இனவெறி மனநிலையையே ட்ரம்ப் விதித்த பயணத் தடை காட்டுகிறது

## ஈரான் விமர்சனம்




ஈரான் உட்பட 12 நாடுகளின் குடிமக்களுக்கு அமெரிக்கா பயணத் தடை விதித்திருப்பது, அந்நாட்டின் இனவெறி மன நிலையின் அடையாளம் என்று ஈரான் விமர்சித்துள்ளது.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தனது முதல் முறை பதவிக்காலத்தில் இருந்தே பயணத் தடை கொள் கையை அறிமுகப்படுத்தி வருகிறார். இரண்டாவது முறை யாக பதவியேற்ற பிறகு தற்போது 12 நாடுகளுக்கு அமெரிக் காவுக்குள் நுழைவதற்கு அவர் தடை விதித்துள்ளார். அதற்கான பிரகடனத்தில் கடந்த புதன்கிழமை ட்ரம்ப் கையெழுத்திட் டுள்ளார்.

அதன்படி, ஆப்கானிஸ்தான், மியான்மர் (பர்மா), சாட், காங்கோ குடியரசு, ஈக்வடோரியல் கினியா, எரித்திரியா, ஹைட்டி, ஈரான், லிபியா, சோமாலியா, சூடான் மற்றும் ஏமன் ஆகிய 12 நாடுகளைச் சேர்ந்த குடிமக்கள் அமெரிக் காவுக்குள் நுழைவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளார்கள்.

இது தவிர புருண்டி, கியூபா, லாவோஸ், சியரா லியோன், டோகோ, துர்க்மெனிஸ்தான் மற்றும் வெனிசுலா ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்களுக்கு வரையறுக்கப்பட்ட கட்டுப்பாடு கள் விதிக்கப்பட்டுள்ளன. இந்த நாடுகள் அதிக அளவிலான ஆபத்தை ஏற்படுத்துபவை என குறிப்பிடப்பட்டுள்ளது. இருப் பினும் இந்த நாடுகளுக்கு நுழைவுத் தடை விதிக்கப்பட வில்லை.

அமெரிக்க ஜனாதிபதியின் புதிய பயண தடை உத்தரவு நாளை திங்கள் கிழமை நள்ளிரவு 12.01 மணிக்கு அமலுக்கு வரும் என்று தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில், இதனை ஈரான் கடுமையாக விமர்சித்துள்ளது.

வெளியுறவு அமைச்சகத்தின் வெளிநாட்டு ஈரானியர்க-ளின் விவகாரங்களுக்கான இயக்குநர் ஜெனரல் அலிரேசா ஹஷேமி-ராஜா கருத்து தெரிவிக்கையில்,

“அமெரிக்க கொள்கை வகுப்பாளர்களிடையே இருக்கும் மேலாதிக்க மற்றும் இனவெறி மனநிலையின் தெளிவான அடையாளம் இது.

இந்த முடிவு, அமெரிக்க கொள்கை வகுப்பாளர்கள், ஈரான் மற்றும் முஸ்லிம் மக்கள் மீது கொண்டுள்ள ஆழ்ந்த விரோதப் போக்கைக் காட்டுகிறது. சர்வதேச சட்டத்தின் அடிப் படைக் கொள்கைகளை இது மீறுகிறது. கோடிக்கணக்கான மக்கள், அவர்கள் எந்த நாட்டைச் சேர்ந்தவர்கள் அல்லது எந்த மதத்தைப் பின்பற்றுபவர்கள் என்பதன் அடிப்படையில் பயணிக்கும் உரிமையை இது பறிக்கிறது. இந்தத் தடை பாரபட்சமானது. தடைக்கான காரணம் பற்றி விரிவாகக் கூறாமல் தடை விதித்திருப்பது, அமெரிக்க அரசாங்கத்தின் சர்வதேசப் பொறுப்புக்கூறலை கேள்விக்கு உட்படுத்துகி றது.” என தெரிவித்துள்ளார்.

1979 இஸ்லாமியப் புரட்சிக்குப் பிறகு ஈரானும் அமெரிக் காவும் தூதரக உறவுகளைத் துண்டித்துக்கொண்டன. அதுமுதல், இவ்விரு நாடுகளுக்கு இடையேயான உறவு மிகவும் மோசமாகவே இருந்து வருகிறது. வெளிநாடுகளில் வசிக்கும் ஈரானியர்கள், அதிகமாக இருப்பது அமெரிக்கா வில்தான். அதுதான் அவர்களின் தாயகமாகும். ஈரானின் வெளியுறவு அமைச்சகத்தின் புள்ளிவிவரங்களின்படி, 2020 ஆம் ஆண்டில் அமெரிக்காவில் சுமார் 15 லட்சம் ஈரானியர்கள் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# உக்ரைனின் கார்கிவ் நகர் மீது ரஷ்ய இராணுவம் தாக்குதல்!

ரஷ்ய எல்லைக்கு அருகில் உள்ள உக்ரைனின் மிகப் பெரிய நகரங்களில் ஒன்றான கார்கிவ் மீது, ரஷ்ய இராணுவம் நடத் திய சக்தி வாய்ந்த தாக்குதலில் 3 பேர் கொல்லப்பட்டுள்ளனர் எனவும் 22 பேர் காயமடைந்துள்ளனர் என்றும் நகர மேயர் தெரிவித்துள்ளார்.

தங்கள் நாட்டுக்கு எதிராக ரஷ்யா ஒரே இரவில் 206 ட்ரோன்கள், 2 பாலிஸ்டிக் ஏவுகணைகள் மற்றும் 7 பிற ஏவு கணைகளை ஏவியதாக உக்ரைன் ராணுவம் தெரிவித் துள்ளது.

ரஷ்ய எல்லையில் இருந்து சுமார் 30 கிலோ மீற்றர் தொலை வில் உள்ளது உக்ரைனின் மிகப் பெரிய நகரங்களில் ஒன் றான கார்கிவ். உக்ரைன் மீது ரஷ்யா தாக்குதல் நடத்த தொடங்கி யதில் இருந்து இந்த நகரம் அதிகம் பாதிக்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில், நேற்று முன்தினம் இரவு இந்த நகரத் தின் மீது ரஷ்யா நடத்திய தாக்குதல் குறித்து தெரிவித்துள்ள கார்கிவ் நகர மேயர் இஹோர் டெரெகோவ், “கிழக்கு உக்ரைன் நகரமான கார்கிவ் மீது இரவில் ட்ரோன்கள், ஏவுகணைகள் மற்றும் குண்டுகள் மூலம் ரஷ்யா தாக்குதல் நடத்தியதில் மூன்று பேர் கொல்லப்பட்டனர். ஒன்றரை மாத குழந்தை உட்பட 22 பேர் காயமடைந்தனர்.

முழு அளவிலான போர் தொடங்கியதிலிருந்து கார்கிவ் தற்போது மிகவும் சக்தி வாய்ந்த தாக்குதலை சந்தித்து வருகிறது. இரவு முழுவதும் நகரத்தில் வெடிச்சத்தங்கள் கேட்டன. மேலும், ஏவுகணைகள், ட்ரோன்கள் மற்றும் வான்வழி குண்டுகளுடன் ரஷ்ய துருப்புக்கள் ஒரே நேரத்தில் தாக்கின. பல மாடி கட்டடங்கள், தனியார் குடியிருப்புகள், கல்வி மற்றும் உள்கட்டமைப்பு வசதிகள் ஆகியவை தாக் கப்பட்டன என்று தெரிவித்துள்ளார்.

கார்கிவ் ஆளுநர் ஓலே சினி/ஹுபோவ் கூறுகையில்,

“40 ட்ரோன்கள், ஒரு ஏவுகணை மற்றும் நான்கு குண்டுக ளால் கார்கிவ் நகரில் உள்ள தொழில்துறை வளாகம் ஒன்று தாக்கப்பட்டது. இதன் காரணமாக அப்பகுதியில் தீ விபத்து

## 3 பேர் உயிரிழப்பு



ஏற்பட்டது. மேலும் இடிபாடுகளுக்கு அடியில் இன்னும் மக்கள் இருக்கலாம்.” என்று தெரிவித்தார்.

தங்கள் நாட்டுக்கு எதிராக ரஷ்யா ஒரே இரவில் 206 ட்ரோன்கள், 2 பாலிஸ்டிக் ஏவுகணைகள் மற்றும் 7 பிற ஏவு கணைகளை ஏவியதாக உக்ரைன் இராணுவம் தெரிவித் துள்ளது. உக்ரைனின் வான் பாதுகாப்பு பிரிவுகள் 87 ட்ரோன் களை சுட்டு வீழ்த்தியதாகவும், மேலும், 80 ட்ரோன்கள் தொலைந்து போனதாகவும் உக்ரைன் இராணுவம் தெரிவித் துள்ளது.

முன்னதாக, ரஷ்யாவின் முக்கிய 5 விமான படைத் தளங்கள் மீது உக்ரைன் இராணுவம் கடந்த ஞாயிற்றுக் கிழமை ஒரே நேரத்தில் ட்ரோன்கள் மூலம் தாக்குதல் நடத் தியது. ‘ஒபரேஷன் ஸ்பைடர் வெப்’ என்ற ரகசிய குறியீட டன் நடத்தப்பட்ட இந்தத் தாக்குதலில் ரஷ்யாவின் அணு ஆயு தங்களை சுமந்து சென்று தாக்கக் கூடிய 41 அதிநவீன போர் விமானங்கள் தீயில் எரிந்து நாசமாகின. அதன் தொடர்ச்சியாக, கிரைமியாவை ரஷ்யாவுடன் இணைக்கும் வீதி மற்றும் ரயில் பாதையை தகர்த்து விட்டோம் என்று உக்ரைன் இராணுவம் தெரிவித்தது. இந்தப் பின்னணி யில், உக்ரைன் மீது ரஷ்யா சக்தி வாய்ந்த தாக்குதலை மேற்கொண்டுள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் - 08.06.2025




இன்று நீங்கள் சுப காரியங்களில் பங்கு கொள்வீர்கள். புதிய நபர்கள் மற்றும் நண்பர்கள் ஏற்படுவார்கள். உங்கள் நண்பர்களின் பட்டியல் விரிவடையும்.

உங்கள் பணியில் நற்பெயர் எடுப்பீர்கள். சக பணியாளர்களும் ஆதரவாக இருப்பார்கள்.

உங்கள் துணையுடனான உறவில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும். நல்லுறவை மேம்படுத்த உங்கள் துணையுடன் மனம் திறந்து பேச வேண்டும்.

இன்று பண வரவு அதிகரித்து காணப்படும். இன்றைய தினம் பங்கு வர்த்தகம் லாபம் தரும் மற்றும் சாதகமாக இருக்கும்.

மகிழ்ச்சியான மனநிலை உங்களை ஆரோக்கியமாக வைத்திருக்கும். உங்களை நீங்கள் உற்சாகமாக வைத்துக் கொள்ளுங்கள்.




உங்கள் குடும்பப் பொறுப்புகள் அதிகமாக காணப்படும். எனவே நேர்மையான முறையில் அவற்றை நிறைவேற்ற வேண்டும்.

பணிகள் அதிகரித்து காணப்படும். பணி நிமித்தமான பயணம் காணப்படும். முக்கியமான பணிகளை முடிக்க இயலாத நிலை காணப்படும்.

உங்கள் துனையுடன் தொடர்பு கொள்ளும் போது கவனம் தேவை. இதனால் உறவில் நல்லிணக்கம் பராமரிக்கப்படும்.

உங்கள் நிதிநிலைமையைக் கவனமாகக் கையாள வேண்டும். திடீர் செலவுகள் காணப்படும்.

ஆரோக்கியம் சுமாராக இருக்கும். என்றாலும் கால் வலியால் அவதிப்பட நேரலாம்.




உங்கள் இலக்குகளை எளிதில் அடைவீர்கள். உங்கள் அணுகுமுறையில் விட்டுகொடுத்து செல்லும் போக்குக் காணப்படும்.

உங்கள் மேலதிகாரிகள் மற்றும் சக பணியாளர்களுடன் ஒரு விருந்தில் கலந்து கொள்வீர்கள்.

இன்று உறவில் அன்பு நிறைந்து காணப்படும். அன்பான உணர்வுகளை வெளிப்படுத்துவதன் மூலம் இன்று உறவில் பிணைப்பு அதிகரிக்கும்.

இன்று பண வரவு அதிகமாக காணப்படும். பங்கு வர்த்தகம் மூலம் பணம் சம்பாதிக்கும் வாய்ப்பு உள்ளது.

இன்று நீங்கள் ஆரோக்கியத்துடன் காணப்படுவீர்கள்.




இந்த நாளில் மாபெரும் மாற்றங்கள் ஏற்படலாம். இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

உங்கள் சக பணியாளர்களின் ஆதரவு கிடைக்காது. அவர்களின் மூலம் சில இடையூறுகள் ஏறபடும்.

உங்கள் உறவில் அகந்தை மனப்பான்மை காணப்படும். இத்தகைய உணர்வுகளை தவிர்த்தல் நல்லது.

நிதிநிலை உங்கள் எதிர்பார்ப்பின் படி அமையாது. செலவுகள் அதிகமாக இருக்கும். சேமிப்பை பராமரிக்க இயலாது.

தோள்களில் வலி ஏற்பட வாய்ப்பு உள்ளது. முறையான உடற்பயிற்சி உங்களை ஆரோக்கியமாக வைத்திருக்கும்.




இன்று வெற்றி பெறுவதற்கு விரைந்து முடிவெடுக்க வேண்டும். உங்கள் பணிகளை எளிதாக செய்து முடிப்பீர்கள். இன்று முக்கிய முடிவுகள் எடுப்பதற்கு உகந்த நாள்.

பணியில் உங்கள் முயற்சிக்கான நன்மதிப்பை பெறுவீர்கள்.முக்கியமான பணிகளை செய்து முடிப்பீர்கள்.

உங்கள் துணையுடன் நல்லுறவை பராமரிப்பீர்கள். இது இருவருக்கும் திருப்தியை அளிக்கும்.

இன்று நிதி வளர்ச்சி சிறப்பாக காணப்படுகின்றது. பணம் அதிகமாக காணப்படும். இது உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும்.

இன்று சிறபபான ஆரோக்கியத்தை பராமரிப்பீர்கள்.




நேர்மறை எண்ணங்களை வளர்த்துக் கொள்வது நல்லது. வெளியிடங்களுக்கு சென்று வருவதன் மூலம் அமைதி கிடைக்கும்.

பணியில் வெற்றி பெற மிகுந்த முயற்சி எடுக்க வேண்டும். உங்கள் பணிகளை திட்டமிட்டு முறைப்படி ஆற்ற வேண்டும்.

உங்கள் துணையுடன் சூடான விவாதங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது. உறவில் நல்லிணக்கத்தை பராமரிக்க விஷயங்களை சகஜமாக எடுத்துக் கொள்வது நல்லது.

இன்று வரவும் செலவும் இணைந்து காணப்படும். உங்கள் பணத்தை முறையாக செலவு செய்யும் நிலை காணப்படாது.

சரியான நேரத்தில் உணவு உட்கொள்ளுங்கள். அதிக நீரைப் பருகுங்கள். இது உங்களை ஆரோக்கியமாக வைத்திருக்கும்.




எளிதான மற்றும் திட்டமிட்ட அணுகுமுறை மூலம் இன்று நீங்கள் வளர்ச்சி அடையலாம். உறுதி மற்றும் தைரியம் உங்களை உச்சத்துக்கு அழைத்துச் செல்லும்.

உங்கள் பணிகளை எளிதாக ஆற்றுவீர்கள். பணியிடத்தில் நன்மையும் பாராட்டும் கிடைக்கும்.

நல்ல புரிந்துணர்வை பராமரிக்க நட்பான அணுகுமுறை தேவை. இது இருவருக்கும் இடையேயான உறவின் பிணைப்பை வலுப்படுத்தும்.

இன்று பணவரவு அதிகமாக காணப்படும். உங்கள் சேமிப்பை கூட்ட இயலும்.

நீங்கள் இன்று முழு ஆரோக்கியத்துடன் காணப்படுவீர்கள். இன்றிய நாளை நன்கு பயன்படுத்திக் கொள்ளுங்கள்.




இன்று நீங்கள் உங்கள் உணர்ச்சிகளை கட்டுப்படுத்தினால் உங்கள் லட்சியங்களை அடையலாம். சிறந்த பலனைக் காண இன்று கிடைக்கும் வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

உங்கள் பணிக்கு அங்கீகாரம் பெறுவீர்கள். உங்கள் செயற்றிறன் சிறப்பாக இருந்தாலும் நீங்கள் முழு திருப்தியடைய மாட்டீர்கள்.

உங்கள் துணையுடன் பேசும் போது கவனமாகப் பேச வேண்டும். நட்பான அணுகுமுறை மேற்கொள்வது சிறந்தது.

காப்பீடு போன்ற வகையில் எதிர்பாராத பண வரவு காணப்படும். இது உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும். பணத்தை கவனமாகக் கையாளவும்.

ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும் பிரார்த்தனை மற்றும் தியானம் ஆறுதலை அளிக்கும்.

# இன்றைய ராசி பலன்கள் - 08.06.2025




ஆன்மீக ஈடுபாடு பலன் தரும். பிறருடன் பழகி அவர்களை நண்பர்களாக ஆக்கிக் கொள்ளலாம்.

நல்ல பலன்களைக் காண கடுமையாக உழைக்க வேண்டும். நீங்கள் சிறிது பணிகளை இன்று முடிப்பீர்கள். சில பணிகள் நிலுவையில் இருக்கும்.

உணர்ச்சிவசப்படுவதன் மூலம் துனையுடனான உறவில் புரிந்துணர்வு பாதிக்கப்படும். ஆரோக்கியமான உறவிற்கு இத்தைகைய உணர்வுகளை தவிர்க்க வேண்டும்.

இன்று அதிக செலவுகள் ஏற்படும். சில கடன்களை அடைக்க நேரும்.

உடல் உழைப்பு காரணமாக தோள்களில் வலி ஏற்படும். தியானம் மூலம் அமைதி பெறலாம்.




இன்று உற்சாகத்துடன் நீங்கள் செய்யும் எந்த ஒரு செயலும் உங்களுக்கு சாதகமாக அமையும். சில ஏமாற்றங்கள் காணப்படும். அவைகள் மூலம் தடை ஏற்பட அனுமதிக்காதீர்கள். உங்கள் செயல்களை தொடர்ந்து செய்யுங்கள்.

உங்கள பணியில் சில போராட்டங்கள் சந்திக்க நேரும். ஆனால் உங்கள் பணிகளை திட்டமிட்டு முறையாக ஆற்றுவதன் மூலம் வெற்றி கிடைக்கும்.

உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு காணப்படும். இருவரும் ஒருவரையொருவர் நன்கு புரிந்து கொள்ள வேண்டும்.

இன்று வரவும் செலவும் இணைந்து காணப்படும். நிதிநிலையை கவனமாகக் கையாள வேண்டும்.

இன்று பலகீனமாகவும் சோர்வாகவும் இருப்பீர்கள். தியானம் மேற்கொள்வது நல்லது.




இன்று சில தடைகளை சந்திப்பீர்கள். என்றாலும் திட்டமிட்டு பணியாற்றினால் இந்த நாளை உங்களுக்கு சாதகமாக ஆக்கிக் கொள்ளலாம்.

அதிகரிக்கும் பணிகளை சமாளிக்க நேரும். இதனால் தேவையற்ற தவறுகள் ஏற்படும். பொறுமையுடன் பணிகளைக் கையாள்வது நல்லது.

உங்கள் துணையின் நடத்தை எரிச்சலை ஏற்படுத்தும். அமைதியாக இருந்து அறிவு பூர்வமாகப் பிரச்சினைகளைக் கையாள வேண்டும்.

இன்று நிதிநிலையில் கட்டுப்பாடு காணப்படும். தேவையற்ற செலவுகளை கண்காணியுங்கள்.

செரிமானம் சம்பத்தப்பட்ட பிரச்சினைகள் நேரலாம். வெளியிடங்களில் உணவு உண்பதை தவிர்த்தல் நலம்.




கூடுதல் பொறுப்புகள் காரணமாக பதட்டம் நிறைந்திருக்கும். பாதுகாப்பற்ற உணர்வு கானபப்டும். முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்ப்பது நல்லது.

பணியிடத்தில் அமைதியான அணுகுமுறையை பராமரிக்க வேணடும். இன்று பணிகள் அதிகமாக காணப்படும் என்பதால் பணிகளை சிறப்பாக திட்டமிட வேண்டும்.

உங்கள் உணர்வுகளை உங்களின் துணையிடம் வெளிப்படுத்துவது எளிதாக உணர்வீர்கள். எதிர்மறை எண்ணங்களைத் தவிர்த்தல் நல்லது.

இன்று நிதி வளர்ச்சி சுமாராக காணப்படும். செலவுகள் அதிகமாக இருக்கும்.

சளி அல்லது இருமல் பாதிப்புகள் காணப்படும். நேர்மறை எண்ணத்தை பராமரிக்க முயலுங்கள்.



# சல்லிக் கற்கள் இடையே சூட்சுமமாக ஏற்றி வரப்பட்ட தேக்குமரக் குற்றிகள்

## சாவகச்சேரியில் பொலிஸாரிடம் சிக்கின

(த.சுபேசன்)

சல்லிக்கற்கள் ஏற்றிவருவதைப் போன்று மரக்குற்றிகளுக்கு மேலே சல்லிக்கற்களை போட்டு, மிகவும் சூட்சுமமான முறையில் கடத்திவரப்பட்ட சுமார் 15 லட்சம் ரூபா பெறுமதியான 18 காட்டுத் தேக்கு மரக் குற்றிகளுடன் டிப்பர் வாகனம் ஒன்றை நேற்று சனிக்கிழமை மதியம் சாவகச்சேரி நகர்ப்பகுதியில் வைத்து சாவகச்சேரிப் பொலிஸார் கைப்பற்றியுள்ளமையுடன் சாரதியையும் கைது செய்துள்ளனர்.

சாவகச்சேரி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பாலித செனவிரத்னவின் வழிகாட்டலில் போதைப் பொருள் குற்றச்செயல் தடுப்பு பிரிவின் சப் இன்ஸ்பெக்டர் மயூரன் தலைமையிலான குழுவினருக்கு கிடைத்த இரகசிய தகவல்களுக்கு அமைய முல்லைத்தீவு பிரதேசத்தில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு எடுத்து வரப்பட்ட மரக்குற்றிகளே இவ்வாறு சாவகச்சேரிப் பகுதியில் வைத்து கைப்பற்றப்பட்டுள்ளன் என்பது குறிப்பிடத்தக்கது.